474—

தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயப்படி ஊதியம் வழங்கல்.

*11260—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயப்படி ஊதியம் தராமல் இருப்பதாகப் புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் அரசு நிர்ணயித்தபடி குறைந்தபட்ச கூலி தரப்படுகிறது. குறைந்தபட்ச கூலி தரப்படவில்லை என்ற புகார் எந்தத் தொழிற்சாலையிலிருந்தும் பெறப்படவில்லை.

(ஆ) எழாது.

475—

எஸ். முதுகான பள்ளியில் கால்நடை மருந்தகம் கட்டுதல்.

* 16977—திரு. கே. ஏ. மனோகரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) ஒசூர் வட்டம் எஸ். முதுகான பள்ளியில் ஓர் கால்நடை மருந்தகம் கட்ட மக்களால் நிலம் வழங்கப்பட்டும் இதுநாள் வரையிலும் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டி முடித்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

1993 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓசூர் வட்டம் எஸ். முதுகானபள்ளியில் தற்போது கால்நடை கிளை நிலையம் இயங்கிவருகிறது. இக்கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரால் பரிசீலனை செய்யப்படுகிறது. கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட மக்களால் நிலம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது செயல்படும் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்திய பின்னர், மக்களால் வழங்கப்பட்ட நிலத்தில் நிரந்தரக் கட்டிடம் கட்ட, நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
(இருபத்தைந்தாம் பட்டியல்)

1—

வண்ணார்பேட்டை நகராட்சி துவக்கப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண். 9343— திரு. பே. தர்மலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை நகராட்சி வண்ணாரப்பேட்டை நகராட்சி துவக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS